

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.08.2024) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் அமைந்துள்ள அரசு கிளை அச்சகத்தில் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி வெ. ஷோபனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை சேப்பாக்கம், தோட்டக்கலைத்துறை இயக்குநரகத்தில், நேற்று முன்தினம் (13.08.2024) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தருமபுரி சுப்பிரமணிய சிவா – கள்ளக்குறிச்சி 2 ஆகிய

# இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு முதல் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் விருதுகளை காண்பித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, ஆக. 15-

**தேசிய அளவிலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பால் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய இரு ஆலைகளுக்கு வழங்கப்பட்ட முதல் பரிசிற்கான விருதுகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.8.2024) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சந்தித்து, புதுடில்லியில் உள்ள தேசிய அளவிலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பால் 2022-23ஆம் பருவத்தில் தேசிய அளவில் ஒட்டுமொத்த செயல்திறனுக்கான சிறந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான முதல் பரிசிற்கான விருதினை தர்மபுரி மாவட்டத்திலுள்ள சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், தேசிய அளவில் சிறந்த நிதி மேலாண்மைக்குரிய முதல் பரிசிற்கான விருதினை கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் வழங்கப்பட்டதையொட்டி, அவ்விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், தமிழ்நாட்டில் செயல்படும் சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளை மேம்படுத்திடவும், கரும்பு விவசாயப் பெருமக்களின் நலன் காக்கவும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் பல்வேறு வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் துறை சர்க்கரை ஆலைகள், என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. 2023-24ஆம் அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் அரவையை மேற்கொண்டுள்ளன.

கரும்பு விவசாயிகள் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி ஊக்கத் தொகை, சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கரும்பு விலையை வழங்கிட சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகைக் கடனாக சுமார் 1224.36 கோடி ரூபாய் நிதியுதவி செய்துள்ளது. 2023-24ஆம் அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 215 / சிறப்பு ஊக்கத் தொகை அறிவிக்கப்பட்டு ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் புதிய கரும்பு இரகங்கள், பருசீவல் நாற்றுகள், தோகை தூளாக்குதல், கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கரும்பு அபிவிருத்தப் பணிகளுக்காகவும், ஆலைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் சுமார் ரூ.13.27 கோடி நிதியுதவி செய்துள்ளது. நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டிருந்த தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணைமின் உற்பத்தித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு, நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வந்த நிலையில் இவ்வரசு 1.10.2022 முதல் சுமார் 35 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்கி தொழிலாளர்களின் நலன்காக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக நலிவடைந்த நிலையிலிருந்த சர்க்கரை ஆலைகள் மீண்டும் வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

புதுடில்லியில் உள்ள தேசிய அளவிலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பு ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்படும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைக் கண்டறிந்து விருது வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக 2022-23ஆம் பருவத்தில் தேசிய அளவில் ஒட்டுமொத்த செயல்திறனுக்கான சிறந்த கூட்டுறவு சர்க்கரை ஆலையாக தர்மபுரி மாவட்டம், கோபாலபுரத்தில் செயல்படும் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசைப் பெற்றுள்ளது. மேலும், தேசிய அளவில் சிறந்த நிதி மேலாண்மைக்குரிய முதல் பரிசை கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராபாளையத்தில் செயல்படும் கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை பெற்று மாநிலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகள் தேசிய அளவில் சிறப்பிடம் பெற்று வளர்ச்சி பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சர்க்கரைத்துறை இயக்குநர் த. அன்பழகன், சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகத்தில்

# ரூ.1.82 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 15-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.08.2024) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் அமைந்துள்ள அரசு கிளை அச்சகத்தில் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்தார்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது மாநிலம் முழுவதிலும் உள்ள அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், துறை சார்ந்த நடைமுறை நூல்கள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள், தேர்தல் படிவங்கள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்கி வருவதுடன், அரசு அச்சகங்களுக்கு தேவையான புதிய நவீன இயந்திரங்களை கொள்முதல் செய்தல், உதிரிபாகங்கள் மற்றும் காகிதங்களை கொள்முதல் செய்தல், அரசு அச்சகங்களுக்கு தேவையான பணியாளர்களை நியமனம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்தல்**

திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகம் 1965ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழமை வாய்ந்த கட்டடமாகும். தற்போதுள்ள அக்கட்டடத்தின் அளவு 13,200 சதுர அடி மற்றும் காகித ரீல் குடோன் அளவு 132 சதுர அடி ஆகும். இந்த அச்சகத்தில் பொதுத்துறை தொடர்பான 28 பதிவேடுகளும், காவல்துறை தொடர்பான 17 பதிவேடுகளும் மற்றும் கல்வித்துறை தொடர்பான 1 பதிவேடு, என மொத்தம் 46 பதிவேடுகளும் மற்றும் பொதுத் துறைக்கான 27 படிவங்கள் மற்றும் காவல்துறைக்கான 2 படிவங்கள், என மொத்தம் 29 படிவங்கள் அச்சிடப்பட்டு வருகிறது. மேலும், திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்பட்டு அனுப்பும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றுடன் அவ்வப்போது ஒதுக்கீடு செய்யப்படும் அரசு தேர்வு விடைத்தாள்கள், தேர்தல் படிவங்கள் மற்றும் பல்கலைக்கழக விடைத்தாள்கள் போன்ற அவசர பணிகளும் அச்சிடப்பட்டு அனுப்புகை செய்யப்பட்டு வருகிறது.

இந்த அச்சகம் தமிழ்நாட்டின் மத்திய மாவட்டத்தில் செயல்படுவதால் பிற மாவட்டங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்கு தேவையான படிவங்கள் / பதிவேடுகள் அச்சிட்டு உடனடியாக வழங்க இயலுமென்பதாலும், கிளை அச்சகத்தின் காகித குடோனில் உள்ள காகித இனங்களை வகைப்படுத்தி வைக்க போதுமான இடவசதி இல்லையென்பதாலும், கூடுதல் பணிகள் மேற்கொண்டு உற்பத்தி திறனை அதிகரிக்கவும், இந்த அச்சகத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் அமைந்துள்ள அரசு கிளை அச்சகத்தில் 9456.97 சதுர அடி பரப்பில் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இக்கூடுதல் கட்டடத்தில், பல்கலைக்கழகங்கள், அரசு தேர்வுகளுக்கு தேவையான விடைத்தாள்கள் மற்றும் பொது படிவங்களின் அச்சுப்பணிகளை அதிகரிக்கவும், அச்சுப்பணிகளுக்கு தேவையான காகித ரீல்கள் மற்றும் காகிதங்களை பாதுகாக்கவும், அச்சிடப்பட்ட படிவங்கள், பதிவேடுகளை உரிய முறையில் பராமரித்து இருப்பு வைப்பதற்கும், பொதுமக்கள் மற்றும் பணியாளர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திடவும், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்தளம் வசதி போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி வெ. ஷோபனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில்

# தோட்டக்கலைத்துறை ஆய்வுக் கூட்டம்!

## வேளாண்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்பு!

*சென்னை, ஆக.15*

*வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து நேற்று முன்தினம் (13.08.2024) சென்னை, சேப்பாக்கம் தோட்டக்கலைத் துறை இயக்குநரகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பு குறித்து மாவட்ட வாரியாக அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.*

*இடம் சார்ந்த விவசாயம் மேற்கொள்ள வேண்டும் என்றும், அதிக மக்கள் தொகை கொண்ட சென்னையில் காய்கறி வரத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு அனைத்து அலுவலர்களும் செயல்படவேண்டும் எனவும் வலியுறுத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.*

*மேலும், தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியை விரிவுபடுத்த அனைத்து அலுவலர்களும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், கீரைகள் மற்றும் காய்கறிகள் சாகுபடியை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.*

*தோட்டக்கலைத் துறையின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் அனைத்து தோட்டக்கலைப் பண்ணைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், புதிய ரக பழச் செடிகளை நடவு செய்யவும் வலியுறுத்தினார்.*

*மேலும், நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் நல்ல மழைப்பொழிவு இருப்பதால் அனைத்துத் தோட்டக்கலைத் திட்டங்களுக்கான பழச்செடிகளையும் உடனடியாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட வேண்டும் எனவும், அனைத்துத் திட்டங்களையும் விரைந்து முடித்திடவும் அறிவுரை வழங்கினார்.*

*அதனைத் தொடர்ந்து, பூங்காக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, கலைஞர் நூற்றாண்டு பூங்காவின் கட்டமைப்பு பணிகளை துரிதப்படுத்தி முடித்திட அறிவுறுத்தினார்.*

*பருவமழை காலங்களிலும், பருவமற்ற காலங்களிலும் பெய்யும் மழை பொழிவினால் ஏற்படும் சேதங்களைத் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், விவசாயிகளை நேரில் சந்தித்து உரிய ஆலோசனை வழங்கவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.*

*கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் சாதனை விவரங்கள் குறித்து மாவட்டம் வாரியாக ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடித்திடுமாறு அறிவுறுத்தினார்.*

*மேலும், தோட்டக்கலைத்துறையின் கீழ் இயங்கி வரும் மகத்துவ மையங்களின் தற்போதைய செயல்பாடுகளையும் தோட்டக்கலை பயிற்சி மையங்களின் பயிற்சி குறித்தும் கேட்டறிந்தார். புதிய தொழில்நுட்பங்களை அனைத்து மகத்துவ மையங்களிலும் செயல் விளக்கம் செய்யவும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும் ஆலோசனை வழங்கினார்.*

*இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், செல்வி. அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன், வேளாண்மை இயக்குநர், பா.முருகேஷ் மற்றும் தோட்டக்கலைத் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

### திருமயம் – பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

# நியாயவிலைக் கடை - புதிய மின் மாற்றிகள்! தார்ச்சாலைப் பணி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து – அடிக்கல் நாட்டினார்!

*புதுக்கோட்டை, ஆக.15-*

*புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைச்சர் எஸ்.ரகுபதி புதிய நியாய விலைக் கடை மற்றும் புதிய மின்மாற்றிகளை திறந்து வைத்து, புதிதாக அமைக்கப்படவுள்ள தார்ச் சாலைப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.*

*புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 09.08.2024 அன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை மற்றும் புதிய மின்மாற்றிகளை திறந்து வைத்து, லேனாவிளக்கு முதல் சொக்கநாதபட்டி வரை ரூ.100 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தார் சாலைப் பணியினை அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.*

*பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வசித்துவரும் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைத்தும், பல்வேறு புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டும் வருகிறது. அதன்படி திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை மற்றும் புதிய மின்மாற்றிகளை திறந்து வைத்து, ரூ.100 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தார் சாலைப் பணி அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.*

*புலிவலம் கிராமத்தில் புதிய நியாய விலைக்கடை திறந்து வைத்ததன் மூலம், இப்பகுதி பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று குடிமைப் பொருட்கள் பெற்று வந்தது தவிர்க்கப்பட்டு, தங்களின் இல்லங்களுக்கு அருகாமையிலேயே குடிமைப் பொருட்கள் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய நியாய விலைக்கடையினை இப்பகுதி பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், புலிவலம் ஊராட்சி, லேனாவிளக்கு முதல் சொக்கநாதபட்டி வரை புதிதாக அமைக்கப்படவுள்ள தார் சாலைப் பணியினை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.*

*பின்னர், அமைச்சர் எஸ்.ரகுபதி பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், கொத்தவயல் இளஞ்சாவூர் கிராமத்தில், குறைவான மின் அழுத்தத்தை சரி செய்யும் வகையில் 25KVA/11KV புதிய மின்மாற்றியினையும், தச்சம்பட்டி கிராமத்தில் 63KVA/11KV புதிய மின் மாற்றியினையும், கட்டையாண்டிபட்டி கிராமத்தில் 25KVA/11KV புதிய மின் மாற்றியினையும், தொட்டியம்பட்டி கிராமத்தில் 25KVA/11KV புதிய மின் மாற்றியினையும், பொன்னமராவதி பேருந்து நிலையம் அருகில் 63KVA/11KV புதிய மின்மாற்றியினையும், ஏனாவயல் கிராமத்தில் 63KVA/11KV புதிய மின் மாற்றியினையும் துவக்கி வைத்தார். இதன்மூலம் இப்பகுதியில் உள்ள வீடுகள், விவசாய பம்பு செட்டுகள் ஆகியவைக்கு சீரான மின்விநியோகம் செய்யப்படும்.*

*இந்நிகழ்ச்சிகளில், பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, திருமயம் ஒன்றியக்குழுத் தலைவர் அழ.ராமு, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், மின்சார வாரிய செயற்பொறியாளர் த எம்.ஆனந்தாய், திருமயம் வட்டாட்சியர் புவியரசன், பொன்னமராவதி வட்டாட்சியர் எம். சாந்தா முருகேசன், புலிவலம் ஊராட்சிமன்றத் தலைவர் அ.கருப்பாயி மற்றும் இரா.கணேசன், அ.சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்ற அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.*